**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், முதுகுளத்தூர்.**

**O.S.No. 12/2024**

2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 02ம் நாள் வாதி/பிரதிவாதி தரப்பில் சாட்சி வாக்குமூலம் 1983ம் ஆண்டு 1வது விதியின் ஏற்பாட்டின்படி உதவியாளரால் பிரமாணம் செய்யப்படுகிறது. உறுதி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.முத்துராமலிங்கம் | தாலுகா | : |
| த/ பெயர் | : | கிராமம் | : |
| க/ பெயர் | : | | |
| வயது | : | தொழில் | : |

**வா.சா.1**
நாள் : 02.03.2026
நேரம் : 11.10 .AM

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் 1ம் வாதியாவேன். வாதி தரப்பு சாட்சி 1ஆக எனது தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நான் சொன்ன விபரத்தின் அடிப்படையில் தான் நிரூபண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது. படித்துப் பார்த்து கையொப்பம் செய்தேன். எனது முதல் விசாரணையை ஏற்றுக் கொள்ளுமாறு வணக்கமாய் பிரார்த்திக்கிறேன்.

1)கடந்த 29.06.1990ம் தேதி, வண்டானம் இ.வேப்பங்குளம், இறைச்சிகுளம் கிராம பொது மக்கள் வழிபடும் அருள்மிகு ஸ்ரீமங்கை சோனை முனியப்பசாமி கோவிலுக்காக தாவா சொத்துக்களை முகம்மது அபுபக்கர் வகையறாக்களிடம் ஆறுமுகத்தேவர் மகன் முத்து இருளாண்டித்தேவர் கிரையம் பெற்றதற்கான பதிவு கிரைய பத்திரம் ஆவண எண். 616/1990 SRO நகல் வா.சா.ஆ.1

2)தாவா சொத்துக்கள் சம்மந்தமாக ஆறுமுகத்தேவர் மகன் இருளாண்டித்தேவர் எழுதிக்கொடுத்த உறுதிமொழி பத்திரம் அசல் வா.சா.ஆ.2 **(பதிவு செய்யப்படாத**

**ஆவணம் என்பதால் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது )**

3)தாவா சொத்துக்களுக்கு அருள்மிகு ஸ்ரீமங்கை சோனை முனியப்பசாமி கோவில் பெயரில் ஏற்பட்ட 1180 ம் நம்பர் பட்டா கணினி நகல் வா.சா.ஆ.3

4)கடந்த 31.08.2023 ம் தேதி பரமக்குடி உதவி ஆட்சியரின் உத்தரவு நகல் வா.சா.ஆ.4

5)அருள்மிகு ஸ்ரீமங்கை சோனை முனியப்பசாமி கோவில் அமைந்துள்ள புகைப்படம் 2 அடங்கிய கோர்வை நகல்கள் வா.சா.ஆ.5

(வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளின்படி கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக ஒத்திவைக்கப்படுகிறது)

விசாரணை முடிவுற்ற நேரம்: 11.15.AM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2026.03.02 15:13:52 +0530